Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ iv

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 05 | 18-04-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 59

அழகன் ஓப்செற் பதிப்பகம்

வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புக்களையும்

- தரமான முறையில்
- கணினி முறையில்
- குறித்த தவணையில்

செய்து கொள்ள வேண்டிய ஒரே பதிப்பகம்.

யாழ். சாலை, கிளிநொச்சி.

### திருமலை - மூதூரில் பதற்ற நிலை

# தமிழ் - முஸ்லிங்களிடையே மோதல்கள்

# துப்பாக்கிச் சூடு; வாள்வெட்டு; வீடுகள் தீவைப்பு!

## மூன்று பேர் மரணம்: 18 பேர் காயம்

(மூதூர்)

**திருமலை மாவட்டம் மூதூரில் தமிழர்-முஸ்லிங்களுக்கிடையே ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து துப்பாக்கிச் சூடு, வாள் வெட்டு, மோதல்கள் மற்றும் தீவைப்புச் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டதாகவும், 15க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும், பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக் கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

முஸ்லிம் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டது தொடர்பாக எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து, மூதூர் பகுதியில் கடந்த சில தினங்களாக நிலவிய பதற்ற நிலை, நேற்று வன்முறையாக மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ் வன்முறையின்போது அப்பாவித் தமிழ் மக்கள் தாக்கப்பட்டுள்ள அதே சமயம், வாள்வெட்டு.துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், தீவைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூதூர் பாலத்தோப்பு என்னும் இடத்தில் மூன்று தமிழ் மக்கள்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் பிரதேசத்தில் இரவு நேர ஊரடங்கு

மூதூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையையடுத்து ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலி ஸ்மா அதிபர் அறிவித்துள்ளார்.

மூதூர் பொலிஸ் பகுதிக்குள் நேற்று மாலை 6.00 மணி முதல் காலை 6.00 மணி வரை இந்த ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

நேற்று மாலை மூதூர் பிரதேசத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் நிலையையடுத்து

(iv ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு விரைவு

மூதூரில் நேற்று மாலை துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற இடத்திற்குப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிகளும் சென்றுள்ளதாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## கரையோரப் படையினருக்கு பயிற்சி வழங்க வேண்டும்

### அமெ.விடம் மொறகொட கோரல்

சிறிலங்காவின் கரையோரப் படையினருக்குப் பயிற்சி அளிக்குமாறு அமெரிக்கப் படையினருக்கு அமைச்சர் மிலிந்த மொறகொட அழைப்பு விடுத்துள்ளார்.

வாஷிங்டனில் இலங்கைக்கு உதவி வழங்கும் முன்னோடி மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் அமெரிக்காவின் மெரினாட்படை முகாமிற்கு விஜயம் செய்தபோதே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார். அமெரிக்காவால் வழங்கப்பட்ட கரையோர பாதுகாப்புப் போர்க்கப்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் 10 ஆயிரம் படையினருக்கு புத்தாண்டு விடுமுறை வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள பத்தாயிரம் சிறிலங்காப்படையினர் புத்தாண்டு விடுமுறையில் சென்றுள்ளதாக படைத்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் போர் ஆரம்பித்த காலத்தில் இருந்து இந்த வருடமே முதல்முறையாக அதிகளவான படையினர் விடுமுறையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் குடாநாடு சிறிலங்காப் படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் சுமார் 45 ஆயிரம் படையினர் நிலை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாராளுமன்ற, அமைச்சரவை கூட்டங்களை பகிஷ்கரிக்க முடிவு!

சிறிலங்காவின் அமைச்சரவை மற்றும் பாராளுமன்றக் கூட்டத்தொடரை புறக்கணிக்க முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. மூதூரில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் காணாமல் போனமை தொடர்பாக நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்துத் தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்து எழுந்த முறுகல் நிலை தீர்க்கப்படாத நிலையில் இம் முடிவை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துள்ளது.

## 1000 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்

### அமைச்சர் கொடித்துவக்கு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நிலவும் தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக அனுபவமுள்ள தகுதி வாய்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதன்படி வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை புரியும் ஆசிரியர்களில் சுமார் ஆயிரம் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இது குறித்து ஆராயும் ஆவணங்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரசுடனான முறுகல் குறித்து பிரதமர் ஆராய்வு

(திருமலை)

முஸ்லிம் காங்கிரசுடன் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர்களுடன் கூடி ஆராய்ந்துள்ளார்.

மூதூரில் இரு இளைஞர்கள் கடத்தப்பட்டதுடன் ஒரு இளைஞரின் தாயார் தற்கொலை செய்து கொண்டதை அடுத்து ஏற்பட்டுள்ள முறுகல் நிலை காரணமாக அங்கு பதற்றம் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றும் கடைகள் மூடப்பட்டு போக்குவரத்துக்களும் சீர் குலைந்து காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



கிளிநொச்சி குருகுலத்தில் சுழற்சி முறையில் நடைபெற்றுவரும் உண்ணாவிரதம்

## வன்னியில் 20,000 சிறுவர்கள் பாடசாலை செல்வதில்லை

### 50 சதவீத ஆசிரியர் பற்றாக்குறையும் உண்டு

வன்னியில் பாடசாலை செல்லும் வயதில் உள்ள சுமார் 20,000 சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என்று தெரிவந்துள் ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப உதவித்திட்ட (GTZ) கருத்துக்கணிப்பின்படி மேலும் 17000 சிறுவர்கள் பாடசாலை செல்லாது தமது இளமைப் பராயத்தைக் கழித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இந்தத் திட்டத்தின் மூலம் வன்னியில் கல்வி புனர்வாழ்வு நடவடிக் கைகளை நடைமுறைப்படுத்துவ தற்கு மனிதவளங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

உளவியல் ரீதியாக பாதிக்கப்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி எழுச்சி நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் உணர்வு பூர்வமாக ஆரம்பம்

தியாக தீபம் அன்னை பூபதி அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவு எழுச்சி நாள் நிகழ்வுகள் நேற்றுத் தமிழீழ தாயகம் எங்கும் எழுச்சியுடன் ஆரம்பமாகியது.

நேற்றுக்காலை அனைத்துப் பிரதேச மாவட்ட ரீதியாக முக்கிய இடங்களில் தமிழீழத் தேசியக் கொடியேற்றப்பட்டு, மலர் வணக்கம் செலுத்தப்பட்டு, எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகின. அத்துடன் அரச.அரசசார்பற்ற நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் அன்னையின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அன்னையின் தியாகத்தை பறைசாற்றும் பாடல்கள்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### O/L வர்த்தகம்

2004 இல் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வர்த்தகம் பிரத்தியேக வகுப்பு ஆரம்பமாகின்றது. தொடர்புகட்கு: திரு. தி.வரதன் நீதிமன்ற முன் வீதி, கிளிநொச்சி. (3090)

### தவறிவிட்டது

இராமையா ஜெகதீஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல: 740973860 V 14.04. 2003 அன்று கிளி/சேவியர் கடைச் சந்திக்கும் இரணைமடுவுக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (3094)

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

### ஜோண் கல்வி நிலையம்

முல்லை வீதி, புதுக்குடியிருப்பு. 2005 A/L வகுப்புக்களும், O/L மீட்டல் வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

காலம்: 21.04.2003 - திங்கள் பி.ப 3.00 மணி. ஏனைய வகுப்புக்களும் நடைபெறுகின்றன. நிர்வாகி. (2842)

### தவறிவிட்டது

795074325V இலக்கமுடைய மதியாபரணம் அகிலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 14.04.2003 அன்று மல்லாவியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (2921)


# மொழி, கலாச்சாரத்தை ஈழத்தமிழர் உயிரிலும் மேலாக மதிக்கின்றனர்

## யாழ். சென்ற தமிழக பின்னணிப் பாடகி ரி.கே.கலா

ஈழத்து எழுச்சிப் பாடல்கள் ஆழமான பொருள் பொதிந்தவையாகவும் தமிழ் மக்களின் உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பனவாகவும் அமைந்துள்ளன என யாழ்ப்பாணம் சென்ற தென்னிந்திய திரைப்படப் பாடகி ரி.கே.கலா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை விடுதி ஒன்றில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்த வரை தமிழ்மொழியையும் அதன் கலாசாரத்தையும் தமது உயிரிலும் மேலாக மதிக்கின்றனர். இதனை ஈழத் தமிழர்களது எழுச்சிப் பாடல்களும் கலைபண்பாட்டு நிகழ்வுகளும் கட்டியம் கூறுகின்றன.

இங்கு நடைபெறும் யுத்தம் பற்றி தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்குப் பெரும்பாலும் தெரியாது. அத்தகையவர்களில் நானும் ஒருத்தி. இங்குவந்து பார்த்த போதுதான் இங்கு நடைபெற்ற கொடூரத்தின் தாக்கம் புலப்படுகிறது.

திருகோணமலையில் நடைபெற்ற இசை, நடன, நாடகவிழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் தமிழர்களின் போராட்ட வாழ்க்கையைச் சித்தரித்தன. அதில் வந்த காட்சிகள் பல என்னை மெய் சிலிர்க்க வைத்ததோடு மனதையும் ஒருகணம் கலங்கடித்துவிட்டன.

தமிழ் நாட்டில் எனக்குக் கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் ஈழத் தமிழர்கள் பட்ட துன்பங்களை எடுத்துக்கூறுவேன்.

தென்னிந்திய திரைப்படப் பாடல்களில் பெரும்பாலானவை தமிழையும் அதன் கலாச்சாரத்தையும் கொலை செய்வதாகக் காணப்படுகின்றன. அத்துடன் அப்பாடல்களைப்பாடுவோர் தமிழை ஒழுங்காக உச்சரிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர்.

இதனால் தமிழ் கொலை செய்யப்படும் நிலைகாணப்படுகிறது.

# ஆசிரிய கலாசாலைக்கு விண்ணப்பம் கோரல்

நாடு முழுவதிலும் அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கும் பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு ஆசிரிய கலாசாலைகளில் இரண்டு வருட பயிற்சிகள் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்குக் கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் இதனை அறிவித்துள்ளார். மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்ட அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ள தனியார் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர், பிரதம ஆணையாளர், ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை, மனிதவள அபிவிருத்தி, கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

# ரவூப் ஹக்கீமுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## ஆளுநர் அலவி மௌலானா தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம் விவகார அமைச்சராக பதவி வகிப்பதற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

முஸ்லிம் விவகார அமைச்சர் பதவிக்கு அவர் தகுதி அற்றவர் எனவும், அப்பதவியிலிருந்து அவர் விலக வேண்டும் எனவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேல்மாகாண ஆளுநரான அலவி மௌலானா கூறியுள்ளார்.

இவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு பொ.ஐ.முன்னணி நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


## துயர் பகிர்வோம்

### மாப்பாணர் சிவசிதம்பரம் ரவீந்திரன்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவின் முத்துஐயன் கட்டுக் குளம் கிராம உத்தியோகத்தரான மாப்பாணர் சிவசிதம்பரம் ரவீந்திரன் அவர்கள் 15.04.2003 அன்று கொழும்பில் காலமாகிய செய்தி கேட்டு அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்திற்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன் புரிச்சங்கம்.

(2841)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2003 மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ப.நோ.கூ. சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை அரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ப.நோ.கூ. சங்கங்களிடம் இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல | ப.நோ.கூ. சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2003,மார்ச் (MT) | 2003,ஏப்ரல் (MT) | 2003,மே (MT) |
| 01 | யாழ்ப்பாணம் | 250 | 250 | 250 |
| 02 | நல்லூர் | 110 | 110 | 110 |
| 03 | அச்சுவேலி | 115 | 115 | 115 |
| 04 | நீர்வேலி | 120 | 120 | 120 |
| 05 | மானிப்பாய் | 100 | 100 | 100 |
| 06 | பண்டத்தரிப்பு | 70 | 70 | 70 |
| 07 | தெல்லிப்பளை | 47 | 47 | 47 |
| 08 | அளவெட்டி மல்லாகம் | 115 | 115 | 115 |
| 09 | சங்கானை | 150 | 150 | 150 |
| 10 | உடுப்பிட்டி | 30 | 30 | 30 |
| 11 | கட்டைவேலி நெல்லியடி | 40 | 40 | 40 |
| 12 | பருத்தித்துறை | 90 | 90 | 90 |
| 13 | புலோலி | 25 | 25 | 25 |
| 14 | மருதங்கேணி | 60 | 60 | 60 |
| 15 | சுன்னாகம் | 155 | 155 | 155 |
| 16 | சாவகச்சேரி | 115 | 115 | 115 |
| 17 | கைதடி | 60 | 60 | 60 |
| 18 | கொடிகாமம் | 105 | 105 | 105 |
| 19 | வேலணை | 20 | 20 | 20 |
| 20 | புங்குடுதீவு நயினாதீவு | 40 | 40 | 40 |
| 21 | ஊர்காவற்றுறை | 55 | 55 | 55 |
| 22 | காரைநகர் | 40 | 40 | 40 |
| 23 | தீவகம் | 08 | 08 | 08 |
| 24 | நெடுந்தீவு | 20 | 20 | 20 |
| | மொத்தம் | 1940 | 1940 | 1940 |

02. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500 /= வினை யாழ். மாவட்ட புனர்வாழ்வு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003.04.21ஆம் திகதி தொடக்கம் 2003.04.29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணிதொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03. மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500 /= ஐ அந்தந்த மாவட்ட செயலகங்களில் செலுத்தி, அரசாங்க அதிபர்களிடம் இருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி கோரப்படவுள்ள அரிசி புழுங்கல் (சிவப்புநாடு) அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05. கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு கேள்விப் பத்திரத்தைப் பெற்றவர்கள் கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் இருப்பின் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (கேள்வி முறி - Bid Bond) மெ.தொன் ஒன்றுக்கு ரூபா 600 /= படி செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்தில் உள்ளது.)

06. பூரணப்படுத்திய இரு கேள்விப் பத்திரங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 30-04-2003 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

07. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

08. கேள்வி கோருபவர்கள் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

09. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி கோரியவர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

**செ.பத்மநாதன்**
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
14.04.2003

(சி-7853)

# பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை புலிகளுடன் இணைந்தே மேற்கொள்ள வேண்டும்

## - சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளுடன் இணைந்துதான் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் பிரதான சக்தியாக விளங்குகின்றார்கள். அரசியல் தீர்வையும் விடுதலைப்புலிகளின் சம்மதத்துடன்தான் ஏற்படுத்த முடியும் என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.**

வெளிநாட்டு செய்திச் சேவை ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய சிறப்புப் பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள் குறித்து தாம் அலட்டிக் கொள்வதில்லை என்றும் கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் சர்வதேச நாடுகள் சிறிலங்காவிற்கு எல்லையற்ற நிதியுதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றன. அதற்கு நிரந்தர சமாதானம் தேவை.

ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்த்து, புதிய அரசாங்கமொன்றை உருவாக்கலாம் என்ற எதிர்க்கட்சிகளின் கனவு நனவாகாது.

பொதுத் தேர்தல் ஒன்று வந்தாலும் அதனைச் சந்திப்பதற்கு ஐ.தே. முன்னணி அரசாங்கம் தயாராக இருக்கிறது.

பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறுமானால், ஐ.தே.மு. வெற்றி பெறும். ஆனால், அவ்வாறான தேர்தல் ஒன்று அவசியமில்லை.

இருந்தாலும் பொ.ஐ. முன்னணி ஆட்சியைக் கைப்பற்றப் போவதாகத் தெரிவிக்கின்றது. அது மிகவும் வேடிக்கையானது. எந்தச் சக்திகளாலும் ஐ.தே. முன்னணி அரசாங்கத்தை மாற்றியமைத்துவிட முடியாது என்றும் அவர் சொன்னார்.

### - சமாதானப் பேச்சுக் குறித்து -

# உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் பொ.ஐ.மு. ஆராய்கிறதாம்!

(கொழும்பு)

அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் சமாதான நடவடிக்கை தொடர்பாக உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் ஆராய்ந்து வருவதாக பொ.ஐ.முன்னணியின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக கம்பளை பிரதேசசபை உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 1958ல் வெளியேறிய சலாவி தற்போது ஈராக் திரும்பினார்

(பாக்தாத்)

அமெரிக்காவின் ஆதரவுடன் கூடிய ஈராக்கிய அரசியல்வாதி அகமட் சலாவி நேற்று முன்தினம் பாக்தாத் சென்றுள்ளார்.

1958ஆம் ஆண்டு குடியாட்சி கவிழ்க்கப்பட்டபோது பாக்தாத்தை விட்டுச் சென்ற சலாவி இப்போதுதான் பாக்தாத் சென்றுள்ளார். ஈராக்கை விட்டுச் சென்றிருந்த அரசியல்வாதிகளில், சதாம் ஹுசைனின் அரசாங்கம் கடந்த வாரம் கவிழ்ந்ததைத் தொடர்ந்து மீண்டும் அங்கு திரும்பியுள்ளமுதலாவது அரசியல்வாதி சலாவி ஈராக்கிய தேசிய காங்கிரஸ் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்ணிவெடிகளால் உலகில் வருடாந்தம் 800பேர் பலி!

(லண்டன்)

உலகளாவிய ரீதியில் 64 நாடுகளில் சுமார் 11கோடியே 50 இலட்சம் கண்ணி வெடிகள், மிதிவெடிகள் மற்றும் பொறி வெடிகள் என்பன புதைக்கப்பட்டுள்ளன.

இதனைவிட சுமார் 10 கோடி கண்ணிவெடிகள் புதைக்கப்படுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருடமும் 20 இலட்சம் தொகையான மிதிவெடிகள், கண்ணி வெடிகளால் 800 பேர் வரை உயிரிழக்கின்றனர்.

இவற்றுக்கு அப்பால் 1975ஆம் ஆண்டு முதல் சுமார் 10 இலட்சத்திற்கு மேலான மக்கள் இந்த வெடிபொருட்களினால் உயிரிழந்தோ அல்லது காயமடைந்தோ இருப்பதாக சர்வதேச ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தானே உலகில் பொறுப்பற்ற நாடாகத் திகழ்கிறது

## - இந்தியா குற்றச்சாட்டு

(புதுடில்லி)

பாகிஸ்தான் பொறுப்பற்ற முறையில் செயற்படுவதாக இந்தியா பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளது.

அண்மையில் இந்தியா பற்றிப் பேசிய பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் சூரி இந்தியா பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்துமானால், கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும், இந்தியாவை விட தம்மிடம் அதி சக்தி வாய்ந்த ஏவுகணைகள் உள்ளமையினால், தோற்றுப் போவது இந்தியாவாகத்தான் இருக்கும் என்றும் மிரட்டல் விட்டிருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் ஜஸ்வந் சிங்கா பாகிஸ்தான் தொடர்ந்து வன்முறைச் செயல்களை தூண்டிவருவதாகவும், பயங்கரவாத செயல்களுக்கு அந்நாடு ஆதரவு அளித்து வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் உலகிலேயே பாகிஸ்தான் தான் பொறுப்பற்ற நாடாகத் திகழ்கின்றது என்றும் அவர் குறை கூறியுள்ளார்.

இதேவேளை, ஜம்மு-காஷ்மீர் பகுதியில் எல்லைக்கப்பால் இருந்து பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவி வருவதாக இராணுவ துணைத் தளபதி திரு. யாதவா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஈராக்கிற்கு ஏற்பட்ட நிலை தமக்கும் ஏற்பட்டு விடுமோ என பாகிஸ்தான் அச்சம் கொண்டுள்ளதாகவும் யாதவா மேலும் கூறியுள்ளார்.

### – ஈராக் போருக்கு –

# 2 இலட்சம் கோடி ரூபா இதுவரை செலவாம்

(வாஷிங்டன்)

சதாமின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளமையினால், ஈராக் மீதான பொருளாதாரத் தடையை நீக்குமாறு ஐ. நா. சபையிடம் அமெரிக்க அதிபர் புஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஈராக் மீதான போருக்கு இதுவரை இரண்டு இலட்சம் கோடி ரூபா செலவாகியுள்ளதாக அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

# சார்ஸ் நோய்க்கிருமி இனங்காணப்பட்டுள்ளது

(லண்டன்)

"சார்ஸ்" நோயை ஏற்படுத்தும் வைரஸ் கிருமி சரியாக இனங்காணப்பட்டிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இது சாதாரண தடிமனை உருவாக்குகின்ற வைரஸ் கிருமியிலிருந்து சற்றே மாறுபட்ட ஒரு புதுவகையான கிருமி என்று உலக சுகாதார நிறுவனத்தின் அதிகாரியான டாக்டர் டேவிற் ஹைமன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கிருமி மனிதர்களின் சிறுநீர், மலம், கண்ணீர், மூக்குநீர், எச்சில் போன்ற கழிவுகளில் இருக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கிருமியை இனங்கண்டிருப்பது, இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களை இலகுவாக அடையாளம் காண்பதற்கும், இக்கிருமி எப்படிப் பரவுகின்றது என்பதை விரிவாக அறிந்துகொள்வதற்கும் உதவியாக அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### - பொருளாதார நெருக்கடியின் விளைவு -

# பண்டமாற்று நடைமுறை புருணையில் ஆரம்பம்!

(பந்தர்சேரிபெகவான்)

புருணையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி போன்றன பாதிக்கப்பட்டு, எப்போதுமில்லாத அளவாக வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துள்ளது.

இதனைப் போக்குவதற்கு அரசு திணறிவருவதால், சுமார் 15 இலட்சம் பேர் பண்டமாற்று முறையின் மூலம் வாழ்க்கை நடத்தி வருகின்றார்கள்.

முக்கிய நகரங்கள், கோயில்கள், விளையாட்டு மைதானங்கள்,பூங்காக்கள் போன்ற இடங்களில் பண்டமாற்றுக்கான மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### - தமிழகம் - சேலத்தில் -

# பெண் சிசுவைக் கொன்றதால் மூவருக்கு ஆயுள் தண்டனை

(சென்னை)

பெண்சிசு என்னும் காரணத்தால், கொலை செய்த பெற்றோருக்கு சேலம் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

சேலம் இரும்பாலையை அடுத்த பெருமாள்பட்டியைச் சேர்ந்த முருகேசன் - கலைச்செல்வி தம்பதியினர், இரண்டாவதாகவும் பெண் குழந்தை பிறந்தமையினால், அதனை கணவன், மனைவி, கணவனின் தாயார் காளியம்மா மூவரும் சேர்ந்து கொலைசெய்துள்ளனர்.

இதனால் சேலம் நீதிமன்றம் பெண் சிசுவைக் கொலை செய்தமைக்காக இம்மூவருக்கும் ஆயுள் தண்டனையும், இக்குற்றத்தை மறைக்க முயன்றமைக்காக மேலும் மூன்று ஆண்டு சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.


# பதவி வெற்றிடங்களிற்கான விண்ணப்பம் கோரல்

**வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (நியாப்) 2003ஆம் ஆண்டின் செயற்பாட்டிற்கான தலைமைக்காரியாலய செயலணி அமைத்தல் கிளிநொச்சி மாவட்டம்.**

மேற்படி செயலணிக்குத் தேவைப்படும் ஆளணி பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன. குறிப்பிட்ட தகைமையும், அனுபவமும் உடைய விண்ணப்பதாரர்களை மட்டும் விண்ணப்பங்களைத் தயாரித்து பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ பணிப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடுவப்பணியகம், கண்டிவீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அல்லது பணிப்பாளர் த.பு.கழகம், 82/1, கே.கே.எஸ். வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30-04-2003 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். விண்ணப்பப் படிவங்களை மேற்கூறிய முகவரிகளில் அமைந்துள்ள காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆளணி பற்றிய விபரங்கள்**

**01. எழுதுனர்**
**02. கணக்கு எழுதுனர்**
**03. கணினி இயக்குனர்**
**04. காரியாலய சிற்றூழியர்**
**05. தொடர்பாளர்**
**06. படவரைஞர்**

**சம்பளம்:-**
தமிழர் புனர்வாழ்வுக்கழக சேவையிலுள்ள பதவிகளுக்கு வழங்கப்படும் சம்பள அளவுத்திட்டத்தில் தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு தீர்மானிக்கப்படும்.

**வயதெல்லை:-**
22 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட வயதெல்லையைக் கொண்டிருக்கும் ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தகுதியான விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை பின்வரும் நாட்களில் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். தவறாது சமுகம் கொடுக்கவும்.

01. கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு.
வைகாசி மாதம் 7ஆம் திகதி புதன்கிழமை (07-05-2003) காலை 9.30 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்தில் நடைபெறும்.

02. யாழ். மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு.
வைகாசி மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை (10-05-2003) காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக காரியாலயத்தில் நடைபெறும்.

(சி-8082)

# பிரதமரை ஹக்கீம் மூதூர் அழைப்பு; தேவையற்றதொரு விடயம்!

## பாராளுமன்ற உறுப்பினர் நூர்தீன் மசூர்

மூதூரில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவசரப்பட்டுப் பிரதமரை அங்கு அழைப்பது தேவையற்ற விடயம் என்று முஸ்லிம் காங்கிரசின் மாற்று அணியைச் சேர்ந்த நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஹக்கீம் உறுதியான முடிவுகளை எடுக்காது அவசரப்பட்டு இத்தகைய முடிவுகளை எடுப்பது முறையற்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் முரண்பட்டுள்ள அமைச்சர் ஹக்கீம் எத்தகைய முடிவுகளை எடுத்தாலும் தமது மாற்று அணியில் உள்ள ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவார்கள் என்று அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

# போரதீவுப்பற்று பி.ச. நூலகம் திறந்து வைப்பு



உலக தரிசன நிறுவனத்தால் பழுகாமத்தில் அமைக்கப்பட்ட நூலகம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. போரதீவுப்பற்று பிரதேச சபைக்கென சுமார் 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நூல் நிலையமே திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். பாராளுமன்ற உறுப்பினர் ஞா. கிருஸ்ணபிள்ளை நினைவுக் கல்லைத் திறந்து வைத்தார். மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மா. தயாபரன் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

# சிறில. வுக்கு 56 கோடி டொலர் உதவி சர்வதேச நாணய நிதியம் ஆராயும்

(கொழும்பு)

சிறிலங்காவிற்கு 56 கோடி டொலர்களைகடனாக வழங்குவது குறித்து சர்வதேச நாணய நிதியம் ஆராயவுள்ளது.

இதற்கான கூட்டம் இன்று வாஷிங்டனில் நடைபெறவுள்ளதாக சிறிலங்கா நிதி அமைச்சர் கே.என். சொக்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அடுத்த மூன்று வருட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவே இந்தக் கடனுதவி பெறப்படவுள்ளதாகவும் இந்த நிலையில் வறுமை ஒழிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சிறிலங்காவின் சீரான பொருளாதார முகாமைத்துவத்தைக் கருத்தில்கொண்டேசர்வதேச நிதி அமைப்புக்கள் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளதாகவும் சொக்ஸி மேலும் தெரிவித்துள்ளார்.

## 'புத்தரின் பெயரில்' திரைப்படத்திற்கு சர்வதேச விருது

"புத்தரின் பெயரில்" என்ற தமிழ்த் திரைப்படம் அமெரிக்காவின் டிப்போட் வீச் என்ற திரைப்பட விழாவில் சிறந்த வெளிநாட்டுப் படத்துக்கான விருதைப் பெற்றுள்ளது.

தமிழீழப் பிரச்சினையை மையமாகக் கொண்டு விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனையோரால் இதுவரை உலகெங்கும் பத்திற்கு மேற்பட்ட முழுநீளத் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. .

இந்த நிலையில் தமிழர்களின் பிரச்சினைகளின் யதார்த்தங்களை முதற்தடவையாகத் தெளிவாகக் கொண்டிருக்கும் படம் இதுவென்று சர்வதேச விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

லண்டனை மையமாகக் கொண்ட தேசாயி பட நிறுவனம் தயாரித்திருக்கும் இந்தப்படம் பிரித்தானியா உட்பட ஐரோப்பிய நாடுகளில் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## உயர்தர வகுப்பு அனுமதி

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் க.பொ.த (உயர்தர) 2005 பிரிவிற்கான கணித. விஞ்ஞான,கலை, வர்த்தக வகுப்புக்களிற்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பதிவுகள் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மேற்கொள்ளப்படுமெனவும் அன்றைய தினம் அனுமதி கோரும் மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் கொடுக்குமாறும் கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பொன்னம்பலம் மருத்துவ மனையில் இலவச சத்திர சிகிச்சை முகாம்

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பிலுள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையில் இலவச சத்திர சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது.

இவ் இலவச சிகிச்சை முகாம் நாளையும் நாளை மறுதினமும் காலை 8.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையும் யாழ். போதனா மருத்துவ மனையில் சேவையாற்றும் சத்திர சிகிச்சை நிபுணர் ரவிராஜ் தலைமையிலான மருத்துவக் குழுவினரால் மேற்படி மருத்துவமனையினரின் ஆதரவுடன் நடத்தப்படவுள்ளது.

இதில் சிகிச்சை பெற விரும்புவோர்கள் சிகிச்சை நடைபெறும் இரு தினங்களிலும் காலை 10.00 மணிக்கு முன்னதாக வெளிநோயாளர் பகுதிக்கு நேரில் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (பு)

## மல்லாவி வைத்தியசாலையில் கிளினிக் நாட்கள் அறிவிப்பு

மல்லாவி மருத்துவமனையில் கிளினிக் நாட்கள் பற்றிய விபரம் மல்லாவி வைத்தியசாலை நிர்வாகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. மருத்துவ கிளினிக்கும் குழந்தைகளுக்கான கிளினிக்கும் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையிலும். மகப்பேற்றுக்கான கிளினிக் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையிலும், பெண் நோயாளர்களுக்கான கிளினிக் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமையிலும், சத்திர சிகிச்சைக்கான கிளினிக்கும், கண் கிளினிக்கும் மாதத்தில் 2ஆம், 4ஆம் வியாழக்கிழமைகளிலும் நடைபெறும் எனவும் சத்திர சிகிச்சை வழமைபோல் நடைபெற்று வருகின்றதெனவும் நிர்வாகத்தினர் அறியத்தந்தனர். (07)

## திருத்தம்

ஈழநாதம் நாளேட்டின் விலை தொடர்ந்து ஏழு ரூபாவாகவே இருக்கும். நேற்றைய நாளேட்டில் தவறுதலாக விலை ஆறு ரூபா என இடம்பெற்று விட்டது.

## கண்காட்சி

உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப்பிரிவில் நடைபெற்றுவந்த 2002 ஆம்ஆண்டுக்கான ஆடை அமைத்தல் பயிற்சி நெறி நிறைவு வைபவமும் கண்காட்சியும் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். (19)

## பேராளர் சங்கம நிகழ்வு

தமிழீழ தமிழர் எழுச்சிப் பேரவை பேராளர் சங்கம நிகழ்வு இன்று தருபுரம் ம.வி. மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச்சங்கம நிகழ்வில் பல பகுதிகளில் இருந்தும் பெருமளவு த.தே. எழுச்சிப் பேரவை பிரதி நிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (14)

## தமிழ்க் கூட்டமைப்பு-மாரப்பன விரைவில் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாநகர எல்லைப் பகுதியில் இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவது குறித்து ஆராய்ந்து தீர்வு காணவே இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைக்கு முன்னராக படைமுகாம் நிர்மாணிப்பது தொடர்பாக உரிய தீர்வை எட்டுமாறு சிறிலங்காப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைவாக பாதுகாப்பு அமைச்சில் நடைபெறும் இச் சந்திப்பில் படைமுகாம் அமைப்பது குறித்து படையினர் சமர்ப்பித்துள்ள அறிக்கை பற்றியும் விவாதிக்கப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.

## தனித் தனித் தலைவர்கள்

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் தலைவர்களாக ஹசான் திலகரட்ணவும், மார்வன் அத்தப்பத்தும் தெரிவாகியுள்ளனர்.

இதன்படி டெஸ்ட் அணிக்கு திலகரட்ணவும், ஒரு நாள் அணிக்கு அத்தப்பத்துவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது சிறிலங்காவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணியுடனான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் அணியை வழி நடத்துவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்-முஸ்லிம்...

முஸ்லிம் காடையர்களால் வாளால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, நேற்றுக் காலை கிளிவெட்டியில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் முஸ்லிம் காடையர் கூட்டத்தினால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

மேலும், தமிழ் மக்கள் கிழக்குப் பகுதியில் இருந்து மூதூர் பட்டினத்திற்குச் செல்ல முஸ்லிம் காடையர்கள் தடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வன்முறைச் சம்பவங்களின் உச்சக்கட்டமாக நேற்று மாலையில் தமிழ்- முஸ்லிம் தரப்பினருக்கிடையே துப்பாக்கி மோதல்கள் இடம்பெற்றதாகவும், வீடுகள் பல தீக்கிரையாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டதாகவும், 15 பேருக்கு மேல் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், கொல்லப்பட்டவர்கள் எத்தரப்பினர் என்பது குறித்து உறுதியான தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



ர. சாரங்கன்

வற்றாப்பளை
முல்லைவாணன்
வீதியைச்சேர்ந்த
ரவிகரன் பிரதீபா தம்பதிகளின்
செல்வப்புதல்வன் சாரங்கன்
18-04-2003 இன்று தனது முதலாவது
பிறந்த தினத்தை தனது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக்கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அப்பா,அம்மா, அம்மப்பா,
அம்மம்மா, மாமா, பெரியம்மாமார், அன்ரிமார்,
அக்காமார்,அண்ணாமார், சித்தாமார்,
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தாத்தா, பாட்டி,
அத்தைமார் மச்சான்மார்,மச்சாள், கொலன்டில்
வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார்,
லண்டனில் வசிக்கும் மாமா, பெரியப்பா,
பெரியம்மா ஆகியோர் இவரை வற்றாப்பளை
கண்ணகை அம்மன் அருள் பெற்று
சீரும் சிறப்புடனும் பல்லாண்டு
காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றனர்.
தகவல்:
அப்பா(ரவிகரன்)
வற்றாப்பளை

### கரையோரப்...

பலை இயக்குவது குறித்து தமது நாட்டுப் படையினருக்கு பயிற்சி அளிக்குமாறு கேட்டுள்ளார்.

### மூதூர்...

இந்தப் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. பதற்ற நிலையைத் தணிப்பதற்காகவும் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்காகவும் இந்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

### அன்னை பூபதி...

ஒலிக்கவிடப்பட்டுள்ளதுடன் வீதிகளில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

இதனிடையே கிளிநொச்சியில் அன்னை பூபதி அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் சந்திரன் பூங்காவில் சிறப்புற ஆரம்பமாகி அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதே போன்று புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, விசுவமடு ஆகிய பகுதிகளில் பிரதேச ரீதியாக அன்னையின் நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று சிறப்புற ஆரம்பமாகின.

இதேவேளை, நாளை அன்னை பூபதியின் இறுதி நாள் நிகழ்வுகள் பெரும் எழுச்சியுடன் நடைபெறவுள்ளன. (லோ,19.14)

### 1000 தொண்டர்...

கள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும்

சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்ததுடன் இந்த ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவர் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேலும் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வன்னியில்...

பட்ட சிறுவர்களைப் பராமரிப்பதுடன் போர் அனர்த்தம் காரணமாக மூடப் பட்ட 180க்கு மேற்பட்ட வன்னிப் பாடசாலைகள் மீண்டும் சொந்த இடங்களில் இயக்கப்படவுள்ளன. மேலும் 122 பாடசாலைகள் மாற்று இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் இருபது பாடசாலைகள் இனிமேல் திறக்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும் போதிய வளங்கள் இல்லாததினால் மாணவர்களின் வருகை மிகவும் குறைவாக காணப்படுகின்றது. வன்னிப் பிரதேச பாடசாலையில் 2000 ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவிவருகிறது. இது ஆசிரியர்களின் மொத்த தேவையில் 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.